**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண் 9200/ஆ5/2019 நாள் 22.03.2020**

**பொருள்** வேலூர் மாவட்டம் - மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள்- தேர்வு மையங்களில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற் கொள்ளுதல் -அறிவுரை வழங்குதல் -சார்பு.

**பார்வை** பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 11328 / எம் /இ1/2020 நாள் 18.03.2020

1. பார்வையில் காணும் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் அறிவுறுத்தியவாறு தேர்வர்களின் பாதுகாப்பு நலன் கருதி, ஒவ்வொரு நாளும் தேர்வு துவங்கும் நாளும் தேர்வு துவங்குவதற்கு முன்பு, தேர்வு மையங்களில் உள்ள தேர்வறைகள், மற்றும் தேர்வுப் பணி நடைபெறும் அறைகள் ஆகியவற்றில் உள்ள மேசை, நாற்காலி,இருக்கைகள் ஆகியவற்றில் கிருமி நாசினி தெளிக்க வேண்டும். அதன் பின், இருக்கையில் எழுதப்பட்டிருக்கும் தேர்வெண்கள் ஏதேனும் அழிக்கப்பட்டிருந்தால் தேர்வெண்களை மீண்டும் எழுதி தேர்வர்கள் சரியான இருக்கையில் அமர்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வே தெளிக்க வேண்டும்.

2. தேர்வெழுதுவதற்கு முன்னதாக, தேர்வர்கள் கைகளை சோப்பு மற்றும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து கொள்ள பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் அறிவுறுத்தியவாறு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. தேர்வு முடிவுற்ற பின்பும் தேர்வர்கள் கைகளை சோப்பு மற்றும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

4. தேர்வர்கள் தங்களுடன் HAND Sanitizers எடுத்து வந்திருத்தால், அதனை தேர்வறைக்குள் எடுத்து வர அனுமதிக்கலாம்.

5. **சளி இருமல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள் எவரேனும் முகக்கவசம் அணிந்து வந்தால், முகக்கவசத்துடன் தேர்வெழுத அனுமதிக்கலாம்.**

6. **தேர்வறையில் தேர்வர்களை ஒரு மீட்டர் இடைவெளியில் அமர வைக்க வேண்டும்.**

7. **தேர்வு மையங்களில் பணிப்புரியும் முதன்மைக் கண்காணிப்பாளர், துறைஅலுவலர், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் நிலையான படையினர், அறைக்கண்காணிப்பாளர் அனைவரும் முன் எச்சரிக்கை நடவடிக்கையின் பொருட்டு தேர்வு துவங்கும் முன் கைகளை சோப்பு மற்றும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.**

8. **முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தேர்வு நாளன்று தேர்வு முடிந்தவுடன் அனைத்து மாணாக்கர்கள் உடனடியாக பள்ளியை விட்டு சென்று விட்டார்களா எனவும் பள்ளியின் வளாகம் தூய்மையாகவும் சுத்தமாகவும் உள்ளதா என உறுதிபடுத்தி கொள்ள வேண்டும்**

9. **மேலும் தேர்வுகள் நடைபெறும் நாளில் தேர்வு முடிந்தவுடன் மதிய வேளையில் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தினால் சார்ந்த பள்ளித் தலைமைஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.**

**முதன்மைக் கல்வி அலுவலர்**
**வேலூர்**

**பெறுநர்**

அனைத்து மேல்நிலை தேர்வு மைய தலைமைஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்.

**நகல்**

திருப்பத்தூர் / இராணிப்பேட்டை முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.

வேலூர்/ திருப்பத்தூர்/ அரக்கோணம்/ இராணிப்பேட்டை/வாணியம்பாடி தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.